செய்தி வெளியீடு எண்: 179 நாள் : 30.03.2016

**செய்தி வெளியீடு**

**தேர்தல் விதிமுறை மீறி உரிய ஆவணம் இல்லாமல் சென்ற ரூ.16.30 கோடி , 50 டன் பாமாயில் பறிமுதல் – 30.03.16 வரை விதிமீறியதாக 1857 வழக்குகள் பதிவு**

*********

தமிழ்நாடு தேர்தல் தொடர்பாக பறக்கும்படையினர், நிலையான கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் பல்வேறு இடங்களில் அவ்வப்போது சோதனை மேற்கொண்டு, உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம், பொருட்களை பறிமுதல் செய்து, விசாரணைக்குப்பின் சரியாக இருந்தால் உரியவரிடம் ரொக்கம், பொருட்கள் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, 28.03.16 அன்று பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் பெரம்பலூரில் ரூ.4.51 லட்சம், வேலூரில் ரூ.1.7 லட்சம், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.2.5 லட்சம், சென்னையில் ரூ.3.61 லட்சம், திருவாரூரில் ரூ.45.85 லட்சம் என மொத்தம் ரூ.57,87,360/– ரொக்கம் மற்றும் மதுவகைகள் கைப்பற்றி ரொக்கம் சார் கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்று, நிலையான கண்காணிப்புக் குழுவினர் (SST) 28.03.16 அன்றைய சோதனையின் போது, நாகப்பட்டினத்தில் 50 டன் பாமாயில், சேலம் நகர்பகுதியில் ரூ.13.77 லட்சம், திருவாரூர் மாவட்டத்தில் ரூ.72,27,337/– ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 28.3.16 அன்று மட்டும் இக்குழுவால் ரூ.87.38 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிகளை மீறியதாக (MCC Cases) கட்சிக் கொடியினை பொது இடத்திலிருந்து அகற்றாதது, அனுமதியில்லாமல் சாலைகள் சீரமைத்தது, கட்சி கொடி கம்பம் அமைக்க பள்ளம் தோன்டியது, சுவரில் போஸ்டர் ஒட்டியது பள்ளி மாணவர்களுக்கு உரிய அனுமதியில்லாமல் ஸ்கூல் பேக் வழங்கியத கோர்ட் சுவரில் விளம்பரம் செய்தது, லாரிகளில் கட்சி விளம்பரம் செய்தது போன்ற புகார்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

நிலையான கண்காணிப்புக் குழுவின் மூலம் ரூ.9,01,07,450/– ரொக்கமும் பறக்கும்படையினரால் ரூ.7,29,20,415/– ரொக்கமும் 28.03.16 வரை பறிமுதல் ஆகி உள்ளன.

30.03.2016 வரையில் பொது சொத்தில் சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர் கட்டி சேதம் ஏற்படுத்தியதாக பெறப்பட்ட 1,93,252 புகார்களில் 1,82,788 சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. மேலும் தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக பெறப்பட்ட 76,542 புகார்களில் 68,652 சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன. இதுவரை தேர்தல் விதிகளை மீறியதாக (MCC–1) 1054 வழக்குகளும், வாகனத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக (MCC-1A) 803 வழக்குகளும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**